1975 அக்டோபர் 24]

THE HON. THIRU S. MADHAVAN: (*a*) Yes.

(*b*) It is under the consideration of Government.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: வினக்கள் 1-ம், 2-ம் ஒத்தி வைக்கப்படுகின்றன.

வினக்கள்-விடைகள் முடிவுற்றன.

(**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி * அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சென்னை 600 009 வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2. அறிவிப்புகள்.

(1) அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: சட்டமன்ற மேலவையின் நடப்புக் கூட்டத் தொடரின் நிகழ்ச்சி விபரம் ஏற்கெனவே உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளவாறு நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(2) ஆளுநரிடமிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு, எதிர்பாராச் செலவு நிதி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவினை ஆய்விற்கு எடுத்துக் கொள்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(3) பேரவையிலிருந்து செய்திகள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: தமிழ் நாடு 1975-ஆம் ஆண்டு, எதிர்பாராச் செலவு நிதி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1975) பேரவையால் நிறைவேற்றப் பட்டு, இது அரசியலமைப்புச் சட்டத்தின் 199 வது பிரிவுப்படி பணச்சட்ட முன்வடிவு எனப் பேரவைத் தலைவரால் தீர்மானிக்கப்பட்டு, இம்மேலவையின் பரிந்துரைக்காக பேரவைத் தலைவரால் அனுப்பப்பட்டுள்ளது.